யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை அறக்கட்டளை

இணைந்த புலமைப்பரிசில் திட்டம்

# உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டி

*08 மார்ச் 2021*

# உள்ளடக்கம்

- அறிமுகம்
- நன்கொடை வழங்கியோர்
- பயனாளிகள்
- தெரிவு செய்யும் முறைமை
- எவ்வாறு விண்ணப்பிப்பது?
- புலமைப் பரிசில் வழங்கப்படும் முறையும் உறுதிப்படுத்தலும்
- தொடர்பு கொள்ளல்

# “யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளை அறக்கட்டளை”

- “யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளை அறக்கட்டளை” ஆனது யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கவும், அவர்களது நலனுக்கு எது சிறந்ததெனக் கருதி அறக்கட்டளை நிதியினை முகாமைத்துவம் செய்யவும், கல்விக்கும் அது சார்ந்த விடயங்களுக்கும் கல்லூரி அதிபருடன் இணைந்து உதவும் நோக்கில், 2001ஆம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினரால் ஆரம்பிக்கப்பட்டது.

# இணைந்த புலமைப்பரிசில் திட்டம்

- யாழ். மத்திய கல்லூரியில் பயிலும் திறமைமிக்க, வசதி தேவைப்படும் உயர்தர மாணவர்களுக்கும், யாழ். மத்திய கல்லூரியில் கல்வி பயின்று பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகி உதவி தேவைப்படும் மாணவர்களுக்கும், உயர்கல்வியை இலங்கையில் தொடர்வதற்கான நிதி உதவியினை வழங்குவதற்கென கொழும்பு, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களும், ஐக்கிய இராச்சிய பழைய மாணவ, மாணவிகள் சங்கமும் ஒன்றிணைந்து, இணைந்த புலமைப்பரிசில் திட்டம் உருவாக்கப்பட்டது.

# புலமைப்பரிசில் பெறுவோர்

- இந்த இணைந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வருடாந்தம் உயர்தர மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் அடங்கலாக - ஏறத்தாள 80 மாணவர்கள் தமது புலமைப்பரிசிலைப் பெற்று வருகின்றனர். மேலும் ஒவ்வொரு ஆண்டும்,
  - 20 க.பொ.த. உயர்தர மாணவர்களும்,
  - 10 பல்கலைக்கழக மாணவர்களும்

புதிதாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

# நன்கொடை வழங்கியோர்

- இப் புலமைப்பரிசில் திட்டத்திற்கு கொழும்பு, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இயங்கிவரும் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கங்களும், ஐக்கிய இராச்சிய பழைய மாணவ, மாணவிகள் சங்கமும் மற்றும் பழைய மாணவர்களும் நிதி வழங்கியுள்ளனர்.

# நன்கொடை வழங்கியோர்

## பழைய மாணவர் சங்கங்கள்

- கொழும்பு பழைய மாணவர் சங்கம்
- கனடா பழைய மாணவர் சங்கம்
- அவுஸ்திரேலியா (சிட்னி) பழைய மாணவர் சங்கம்
- ஐக்கிய இராச்சிய பழைய மாணவ, மாணவிகள் சங்கம்

## பழைய மாணவர்கள்

- கலாநிதி எஸ். கே. மகேஸ்வரன் - அமெரிக்கா
- கலாநிதி ரகுநாதன் ஞாபகார்த்த நிதி - அவுஸ்திரேலியா
- திரு. குமாரராஜா நிதி - அவுஸ்திரேலியா
- திரு. லிங்கரட்ணம் நிதி - கொழும்பு
- திரு. வீ. கணேஷ் நிதி - கொழும்பு
- திரு. நோயல் அரசரட்ணம் நிதி - ஐக்கிய இராச்சியம்
- திரு. பாலசுந்தரம் சிவகுமார் நிதி - கொழும்பு
- திரு. எஸ். எஸ். சிவகுமார் நிதி - கொழும்பு

# பயனாளிகள்

## உயர்தர மாணவர்கள்

- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி பயிலும் உதவி தேவைப்படும் மாணவர்கள்.

## பல்கலைக்கழக மாணவர்கள்

- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு, உதவி தேவைப்படும் மாணவர்கள்.

# தெரிவு செய்யும் முறைமை

## உயர்தர மாணவர்கள்

- க. பொ. த.(சா/த) பரீட்சையில், சித்தியடைந்து யாழ். மத்திய கல்லூரியில் உயர்தரத்தைத் தொடரும் மாணவர்கள் அனைவருக்கும் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு, புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

## பல்கலைக்கழக மாணவர்கள்

- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் விண்ணப்பிப்பதன் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

# எவ்வாறு விண்ணப்பிப்பது?

- விண்ணப்பங்கள் இரண்டு வகைகளாகக் கோரப்படுகின்றன.
  1. உயர்தர மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் A/L – 1, A/L - 2
  2. பல்கலைக்கழக மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் UN - 1

# உயர்தர மாணவர்களுக்கான விண்ணப்பங்கள்

- எவ்வாறு மாணவர்கள் அறிந்து கொள்வர்?
  - க.பொ.த.(சா/த) பரீட்சைகள் இடம்பெறும் நாட்களில் அவர்களைத் தெளிவூட்டும் வகையில் பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கான பிரசுரங்கள் வழங்கப்படுதல்.
  - கல்லூரியின் விளம்பரப் பலகையில் விளம்பரப்படுத்தல்.
  - மாணவர்களுக்கான காலை ஒன்றுகூடலில் நிருவாகத்தினரால் தகவல் வழங்கல்.
  - உயர்தரத்திற்கான பிரிவுத் தலைவர் மற்றும் ஆசிரியர்கள் ஊடாகத் தகவல்களை வழங்கல்.
  - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் நிருவாகசபை அங்கத்தவர்களிடமிருந்து.
  - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் இணையத்தளத்தினூடாக.

# உயர்தர மாணவர்களுக்கான விண்ணப்பங்கள்

- எவ்வாறு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்வர்?
  - அதிபர், உயர்தரத்திற்கான பிரிவுத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஊடாகத் தகவல் வழங்கப்பட்டு, அனைத்து மாணவர்களுக்கும் படிவங்கள் (A/L – 1) வழங்கப்படும்.
  - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
  - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் நிருவாகசபை அங்கத்தவர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

# உயர்தர மாணவர்களுக்கான விண்ணப்பங்கள்

- விண்ணப்பங்களை யாரிடம் கையளிப்பது?
  - உயர்தர மாணவர்கள் தாம் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பங்களை (படிவம் A/L – 1) வகுப்பு ஆசிரியர்கள் மூலம், கல்லூரி நிருவாகத்தினரிடம் கையளித்தல் வேண்டும்.
  - புலமைப்பரிசில் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு மாத்திரம் இரண்டாவது படிவம் (படிவம் A/L – 2) வழங்கப்படும்.

# உயர்தர மாணவர்களுக்கான விண்ணப்பங்கள்

- படிவம் A/L – 1 மற்றும் படிவம் படிவம் A/L – 2 ஆகிய இரண்டு படிவங்களுக்குமான வேறுபாடுகள் எவை?
  - உயர்தர மாணவர்களுக்கான இரண்டு படிவங்கள் உள்ளன. அவர்களைத் தெரிவு செய்வதற்கான புள்ளிகள் வழங்குவதற்காக படிவம் A/L – 1 ஆனது, அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும்.
    - முதலாவது (A/L – 1 ) விண்ணப்பத்தினைப் பூரத்தி செய்வதற்கு மாணவர்கள் கிராம உத்தியோகத்தரிடம் செல்ல வேண்டியதில்லை. அத்துடன் வங்கிக் கணக்கு எவற்றையும் ஆரம்பிக்கவும் அவசியமில்லை.
  - புலமைப்பரிசில் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு மாத்திரம் இரண்டாவது படிவம் (A/L – 2) வழங்கப்படும்.
    - இரண்டாவது படிவங்களைப் பெற்ற மாணவர்கள் மாத்திரம் தமது கிராம உத்தியோகத்தரிடம் சென்று உறுதிப்படுத்திக் கொள்வதும், இலங்கை வங்கியில் வங்கிக் கணக்கு ஆரம்பிப்பதும் அவசியமாகும்.

# புலமைப்பரிசிலுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் முறை

- புலமைப்பரிசில் வழங்குவதற்காக மாணவர்களைத் தெரிவு செய்யும்போது, அவர்களது குடும்பத்தவரின் ஆண்டுக்கான கூட்டு வருமானம், பெற்றோரது இழப்பு, ஊனமுற்றிருத்தல் போன்றவையும்,
- பரீட்சைப் பெறுபேறுகள், விளையாட்டுக் கழகங்களிலும், பாடசாலைச் சங்கங்களிலும் பங்களித்தல் போன்றவையும் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

# கிராம உத்தியோகத்தரின் அத்தாட்சிப்படுத்தலும், அதிபரின் விதப்புரையும்

- மாணவரது குடும்ப அங்கத்தவர் விபரங்கள், ஆண்டுக்கான கூட்டு வருமானம் போன்றவற்றை கிராம உத்தியோகத்தர் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.
- மேற்குறித்த விடயங்களுக்கும், மாணவரது பரீட்சைப் பெறுபேறுகள், விளையாட்டுக் கழகங்களிலும், பாடசாலைச் சங்கங்களிலும் பங்களித்தல் போன்றவற்றுக்குமான புள்ளிகளை வழங்குவதன் மூலம் அவை தொடர்பில் மாணவர் ஒருவர் புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவர் என்பதை, கல்லூரி அதிபர் சிபாரிசு செய்வார்.

# தீர்மானங்களுக்கான அதிகாரமும், புலமைப் பரிசில் கொடுப்பனவுகளும்

- நிதியுதவி பெறுவோரைத் தெரிந்தெடுத்தலும், கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதலும் புலமைப்பரிசில் அறக்கட்டளை முகாமைக் குழுவின் பொறுப்பாக அமையும். இப்புலமைப்பரிசில் திட்டம் தொடர்பிலான சகல விடயங்கள் பற்றி இக்குழு எடுக்கும் தீர்மானங்கள் முற்றானதும், இறுதியானதுமாகக் கருதப்படும்.
- புலமைப் பரிசில் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான கொடுப்பனவுகள், மாணவர்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தினரால் வரவிலிடப்படும்.

# தொடர்பு கொள்ளல்

- எவ்வாறு புலமைப்பரிசில் அறக்கட்டளை முகாமைக் குழுவினரைத் தொடர்பு கொள்ளலாம்?
  - கல்லூரி அதிபர் மற்றும் நிருவாகத்தினர் ஊடாக.
  - பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் ஊடாக.
  - கொழும்பு பழைய மாணவர் சங்க இணையத்தளத்தின் ஊடாக.
    - இணையத்தள முகவரி: https//www.jccobacolombo.com

# நன்றி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

பழைய மாணவர் சங்கம் - கொழும்புக் கிளை

https//www.jccobacolombo.com

